## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

# 1981 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, அரச காணிகள் (ஆட்சி மீளப்பெறுதல்) (திருத்தச்) சட்டம்

[1981, செத்தெம்பர் மாதம் 09 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1981, செத்தெம்பர் மாதம் 11 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : சதம் 50

# 1981 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, அரச காணிகள் (ஆட்சி மீளப்பெறுதல்) (திருத்தச்) சட்டம்

[1981, செத்தெம்பர் மாதம் 9 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 5/81 / 1416

**1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, அரச காணிகள் (ஆட்சி மீளப்பெறுதல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்.**

1. இச்சட்டமானது, 1981 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, அரச காணிகள் (ஆட்சி மீளப்பெறுதல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

**1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தில் 6அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.**

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும், 1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, அரச காணிகள் (ஆட்சி மீளப்பெறுதல்) சட்டத்தின் 6 ஆம் பிரிவை உடனடுத்து, பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 6அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"குறித்த சில காலப் பகுதிகளுக்குள் வெளியேற்றற்கான விண்ணப்பங்கள் கையாண்டு முடிக்கப்படுதல்.

6அ. ஐந்தாம் பிரிவின்கீழ் செய்யப்படும் விண்ணப்பமொவ்வொன்றும், அத்தகைய விண்ணப்பத் தேதியிலிருந்து இரண்டு பஞ்சாங்க மாதக் காலப் பகுதிக்குள் இறுதியாகக் கையாண்டு முடிக்கப்படல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் விண்ணப்பத்தைப் பின்பற்றி, நீதிமன்றமொன்று, 7 ஆம் பிரிவின்கீழான அல்லது 10 ஆம் பிரிவின்கீழான அதன் கட்டளையில் குறிப்பீடுசெய்யப்பட்ட காணியிலிருந்து எவரேனுமாள் வெளியேற்றப்படல் வேண்டுமெனப் பணிக்கின்ற அக் கட்டளையை ஆக்குகின்றவிடத்து, வெளியேற்றற்கான விண்ணப்பத் தேதியிலிருந்து மூன்று மாதகாலப்பகுதிக்குள் அத்தகைய ஆட்கள் அக்காணியிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான அத்தகைய எல்லாக் கட்டளைகளையும் நீதிமன்றம் ஆக்குதலும் வேண்டும்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தில் 11அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.**

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 11அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"வெளியேற்றலுக்குப் பின்னர் காணியில் மீளநுழைதல் தவறென்றாதல்.

11அ. (1) ஏழாம் பிரிவின்கீழ் அல்லது 10 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றை நிறைவேற்றுகையில் ஏதேனும் காணியிலிருந்து வெளியேற்றப்பட்டதிலிருந்து பத்து ஆண்டுக் காலப்பகுதிக்குள், செல்லுபடியான அனுமதிப்பத்திரத்தின் கீழன்றி அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கிணங்க வழங்கப்பட்ட அரசினது வேறு எழுத்திலான அதிகாரத்தின் கீழன்றி அக்காணியில் மீள நுழைபவரான எவரேனுமாள், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்ன

ஏ 57179—6,800 (06/81)

ரான சுருக்கமுறை விசாரணையின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்து ஆண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய காலமொன்றுககான மறியற்றண்டனைக்கு அல்லது ஓராயிரம் ரூபா வரையாகக்கூடியதான குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான தவறொன்றுக்கென எவரேனுமாளுக்கெதிராக எவையேனும் வழக்கு நடவடிக்கைகள் தொடரப்பட்டதன்மேல், நீதிவான், 7 ஆம் பிரிவின்கீழான அல்லது 10 ஆம் பிரிவின் கீழான கட்டளையொன்றை நிறைவேற்றுவதில் அத்தகைய ஆள், எந்தக் காணி தொடர்பில் அத்தவறு புரியப்பட்டுள்ளதெனக் குற்றஞ்சார்த்தப்படுகிறதோ அந்தக் காணியிலிருந்து வெளியேற்றப்பட்டாரென்ற எண்பிப்பின்மீது, அத்தகைய ஆளையும் அவரில் தங்கி வாழுநர் எவரேனுமிருப்பின் அவர்களையும் அவ்வழக்கு நடவடிக்கைகள் முடிவுறுதிருக்கும்போது, அத்தகைய காணியிலிருந்து வெளியேறும்படி உடனடியாகக் கட்டளையிடல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவினை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :—

" (2) தகுதிவாய்ந்த அதிகாரியொருவர்,—

(அ) பாதுகாப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் முன்னங்கீகாரத்துடனன்றி, இலங்கைத் தரைப்படைக்கு அல்லது இலங்கைக் கடற்படைக்கு அல்லது இலங்கை விமானப் படைக்கு உரித்தாக்கப்பட்ட, அதனால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதேனும் காணி தொடர்பில் ;

(ஆ) நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் முன்னங்கீகாரத்துடனன்றி, தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்ட, அதனால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதேனும் காணி தொடர்பில் ;

(இ) இலங்கைத் துறைமுக அதிகாரசபைக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் முன்னங்கீகாரத்துடனன்றி, 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் துறைமுக அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்ட, அதனால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதேனும் காணி தொடர்பில்,

3 ஆம் பிரிவினால் அவருக்கு அளிக்கப்பட்ட தத்துவமெதனையும் பிரயோகிக்கலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "தகுதிவாய்ந்த அதிகாரி" என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :—

"" தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது, ஏதேனும் காணி தொடர்பில் பயன்படுத்தப்படுமிடத்து, அக்காணி எம்மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அம்மாவட்டத்தின் அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபரொருவர் அல்லது உதவி அரசாங்க அதிபரொருவர் எனப் பொருளாகுமென்பதுடன்—

(அ) அத்தகைய காணியானது, தரைப்படையின் கட்டுப்பாட்டின் கீழிருக்குமிடத்து, தரைப்படையின் ஏவுநரையும் ;

(ஆ) அத்தகைய காணியானது, இலங்கைக் கடற்படையின் கட்டுப்பாட்டின் கீழிருக்குமிடத்து, இலங்கைக் கடற்படையின் தலைவனையும் ;

(இ) அத்தகைய காணியானது, இலங்கை வான்படையின் கட்டுப்பாட்டின் கீழிருக்குமிடத்து, இலங்கை வான்படையின் ஏவுநரையும் ;

(ஈ) அத்தகைய காணியானது புகையிரதத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்குமிடத்து, புகையிரதத் திணைக்களப் பொது முகாமையாளரையும் ;

(உ) அத்தகைய காணியானது, தேசிய வீடமைப்புத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழிருக்குமிடத்து, தேசிய வீடமைப்பு ஆணையாளரையும் ;

(ஊ) அத்தகைய காணியானது, உள்ளூரதிகாரசபையொன்றின் கட்டுப்பாட்டின் கீழிருக்குமிடத்து, உள்ளூராட்சி ஆணையாளரையும் ;

(எ) இச்சட்டத்தின் ஏதேனும் கருமம் அல்லது ஏற்பாடு தொடர்பில் அரசாங்க அதிபரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் பகிரங்க அலுவலரையும் ; அத்துடன்

(ஏ) அத்தகைய காணியானது, ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளவிடத்து அல்லது அதனால் சொந்தமாக வைத்திருக்கப்படுமிடத்து, அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழிருக்குமிடத்து, அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் பொதுவாக அல்லது சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரையும்,

உள்ளடக்கும்.'.

(2) "அரச காணி" என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் :—

' "அரச காணி" என்பது, எக்காணிக்கு அரசு சட்டமுறையாக உரித்துடையதோ அக்காணி என, அல்லது எக்காணி, அதன்மீது நிற்கும் ஏதேனும் கட்டடத்துடனும் அதனுடன் இணைந்துள்ள அல்லது சேர்ந்துள்ள எல்லா உரிமைகளுடனும் அக்கறைகளுடனும் சிறப்புரிமைகளுடனும் சேர்த்து அரசினால் கையளிக்கப்படலாமோ அக்காணி எனப் பொருளாகும் என்பதுடன் பின்வருவனவற்றையும் உள்ளடக்கும் :—

(அ) ஆற்றுப்பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபைக்கும் மகாவலி அபிவிருத்திச் சபைக்கும் அல்லது அரச காணியை அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையை அபிவிருத்தி செய்யும் பணி பொறுப்பிக்கப்பட்டுள்ள வேறேதேனும் அதிகாரசபைக்கும் உரித்தாக்கப்பட்டுள்ள அல்லது அவற்றின் கட்டுப்பாட்டின்கீழுள்ள காணி ; அத்துடன்

(ஆ) பின்வருவனவற்றுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அல்லது அவற்றால் சொந்தமாக வைத்திருக்கப்படும் அல்லது அவற்றின் கட்டுப்பாட்டின் கீழுள்ள காணி—

(i) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திரண்டாம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட காணிச் சீர்திருத்த ஆணைக்குழு ;

(ii) விடயத்திற்கேற்றுப்போன்று, இறப்பர் ஆராய்ச்சிக் கட்டளைச் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட, 1958 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனச் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட, 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, அரச கமத் தொழிற் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தினால் அல்

லது அதன்கீழ்த் தாபிக்கப்பட்ட, 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தினுல் அல்லது அதன்கீழ்த் தாபிக்கப்பட்ட, 1975 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, பட்டு, அதனோடிணைந்த உற்பத்திப்பொருட்கள் அபிவிருத்திச் சட்டத்தினுல் அல்லது அதன்கீழ்த் தாபிக்கப்பட்ட, 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேயிலை, சிறுபற்று நிலங்கள் அபிவிருத்திச் சட்டத்தினுல் அல்லது அதன்கீழ்த் தாபிக்கப்பட்ட, 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினுல் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபைச் சட்டத்தினுல் அல்லது அதன்கீழ்த் தாபிக்கப்பட்ட ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழு.'.

6. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணையானது, அதன் "இ" என்னும் படிவத்தில்— *அட்டவணையைத் திருத்துதல்.*

"என் முன்னிலையில் 19 ஆம் ஆண்டு..................... மாதம்........... ஆம் நாளாகிய இன்று வாக்குமூலமளிப்பவரால் உறுதிப்படுத்தப்பட்டது*/சத்தியம் செய்யப்பட்டது."

என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"என் முன்னிலையில் 19 ஆம் ஆண்டு..................... மாதம்........... ஆம் நாளாகிய இன்று ..................... இல் வாக்குமூலமளிப்பவரால் உறுதிப்படுத்தப்பட்டது*/சத்தியம் செய்யப்பட்டது.".

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 30 ; (வெளிநாடு) ரூபா 40 ; ஒவ்வோராண்டும் டிசம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இலக்கம் 500 கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.